**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1274/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ராஜா** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சுந்தரமகாலிங்கம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பேரையூரில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. 2, 3 வருடங்கள் ஆகிவிட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் பார்த்துள்ளேன். தெரியும். நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 24.01.2021ம் தேதி மாலை 5.45 மணியளவில்  ஆரப்பாளையத்திலிருந்து திருமங்கலம் செல்லும்  48 எண் கொண்ட டி.எண் 58 N 1661 டவுன் பேருந்தில் நடத்துனராக பணியில் இருந்த போது பேருந்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டு மாலை 6.30 மணியளவில் திருமங்கலம் கப்பலுர் டோல்கேட்டில் வந்த போது அங்கு செக்யூரிட்டியாக பணிபுரிந்த ஆஜர் எதிரி என்னிடம் செல்லவிடாமல் வழிமறித்து தகாத வார்த்தைகளால் பேசி தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் சம்பவம் தொடர்பாக திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி,**இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1274/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அய்யர் | Caste | : |
| Father 's Name / Husband Name | : சின்னசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(09.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது பெருங்காமநல்லுரில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவின் பாதிக்கப்பட்ட தரப்பு எனும் இடத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அதை நான் எதிரியுடன் சமாதானமாக செல்வதற்காக செய்து கொடுத்தேன். **சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் பார்த்துள்ளேன். தெரியும். நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 24.01.2021ம் தேதி மாலை 5.45 மணியளவில் ஆரப்பாளையத்திலிருந்து திருமங்கலம் செல்லும் 48 எண் கொண்ட டி.எண் 58 N 1661 டவுன் பேருந்தில் ஓட்டுனராக பணியில்

இருந்த போது பேருந்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டு மாலை 6.30 மணியளவில் திருமங்கலம் கப்பலுர் டோல்கேட்டில் வந்த போது அங்கு செக்யூரிட்டியாக பணிபுரிந்த ஆஜர் எதிரி அ.சா.1 னிடம் தகராறு செய்தார் என்றும் எங்களை செல்லவிடாமல் வழிமறித்து தகாத வார்த்தைகளால் பேசி தாக்கி காயம் ஏற்படுத்திவிட்டு கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் சம்பவம் தொடர்பாக அ.சா.1 திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி,**இல்லை